Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

STOTRA


சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவ ஜயம்

சிவபக்த லக்ஷணம்

ஆர்திஹர ஸ்தோத்ரம்

[தமிழ் உரையுடன்]
திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாள்
அருளியவை



சிவனடியார்களின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கும்
சிவபக்தி பிரசாரமணி, திருத்தொண்டர் மாமணி
ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
(சங்கரனடிமை ஆங்கீரஸ சர்மா)
"ஸ்ரீமஹாதேவ ஜயம்"
33/2, விவேகானந்தபுரம் முதல் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 03,
தொ.பே.எண் 4713351

அன்பளிப்புப் பிரசுரம்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவ ஜயம்

சிவபக்த லக்ஷணம்

ஆர்திஹர ஸ்தோத்ரம்

[தமிழ் உரையுடன்]

திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாள்
அருளியவை



சிவனடியார்களின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கும்
சிவபக்தி பிரசாரமணி, திருத்தொண்டர் மாமணி

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

(சங்கரனடிமை ஆங்கீரஸ சர்மா)
"ஸ்ரீமஹாதேவ ஜயம்"

33/2, விவேகானந்தபுரம் முதல் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033
தொ.பே.எண் 4713351

வெளியீடு நன்னாள் :

7-12-1999 - செவ்வாய் - அனுஷம் மஹாபெரியவாள் ஸ்மரண நன்னாள் - பிரமாதி கார்த்திகை அமாவாசை - ஐயாவாள் விழா நன்னாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

பதிப்பாசிரியரின் பணிவுரை

"மானிட உருவங்கொண்ட சிவபெருமான்" என்று தமது காலத்திலேயே போற்றப்பட்ட பெருமையுடையவர் ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாள் என்ற சிவபக்தாக்ரகண்யர் ஆவர்.

'ஐயாவாள்' என்றே அக்காலத்து மக்கள் அவரை மரியாதையாகக் கூறுவார்களேயன்றி அவருடைய பெயரைக் கூறி அழையார்கள். இவர்கள் வாழ்ந்த இடம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிசநல்லூர் எனப்படும் திருவிசலூர் ஆகும்.

திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற திருவியலூர் என்பதும் இதுவேயாகும். இத்தலத்துக்கு அருகில் உள்ளது நண்டு பூசித்த கர்க்கடேச்வர சுவாமி எழுந்தருளியிருக்கும் திருந்து தேவன்குடியாகும். இஃதும் திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்ற தலமாகும். இத்தலத்துப் பெருமான் மீது ஐயாவாள் பாடியதே குலீரேச்வராஷ்டகமாகும்.

கார்த்திகை மாதம் அமாவாசை நாளில் இவரது இல்லத்துக் கிணற்றில் கங்கா தேவியானவள் ஆவிர்பவித்துப் பெருகுகிறாள் என்று ஒருவரலாறு பிரசித்தமாகக் கூறப்பட்டு வருகிறது. இக்கிணற்றில் இன்றும் கார்த்திகை அமாவாசை நாளில் கங்கை நதி பெருகி ஆயிரக்கணக்கானவர்கள் நீராடிப் பேறு பெறுகிறார்கள். கார்த்திகை அமாவாசையில் ஐயாவாள் உத்ஸவமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த நாளில் நாமும் இங்கு மேற்கு மாம்பலம் ஓம் முருகாச்ரமத்தில் பிரதி வருடமும் ஐயாவாள் நினைவாக அவரது நூல்களைப் பிரவசனம் செய்யும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

கங்கையின் ஆவிர்பாவம் பொருட்டுப்பாடிய கங்காஷ்டகம் தவிர, இவர் இயற்றியருளிய சிவபக்தி நூல்கள் (1) குலீரேச்வராஷ்டகம் (2) ஜம்புநாதாஷ்டகம் (3) சிவ பக்தி கல்ப லதிகா (4) தாராவளீஸ்துதி (5) தயாசதகம் (6) மாத்ருபூத சதகம் (7) ஸ்துதி பத்ததி (8) ஆர்தி ஹரஸ் தோத்ரம் (9) தோஷ பரிஹாராஷ்டகம் (10) ஆக்யா ஷஷ்டி முதலியனவாம்

சிவநாம சங்கீர்த்தனத்தின் பெருமையையும், சிவபக்திச் சிறப்பையும் பிரகாசப்படுத்தி நிலைநாட்டிய ஸ்ரீ ஐயாவாளின் மேற்படி நூல்களில் ஆக்யா ஷஷ்டி, தயா சதகம், குலீரேச்வராஷ்டகம், சிவபக்த லக்ஷணம் ஆகியவைகள் தக்க அறிஞர்களால் இங்கு பிரவசனம் செய்யப்பட்டுள்ளன. 'ஆக்யா ஷஷ்டி' என்ற நூல் சிவநாம மஹிமை என்ற பெயரில் தமிழில் உரைநடையாக 1976ல் ஒரு முறையும், 1997ல் மறுமுறையும் வெளியிடப்பட்டன. இப்பொழுது சிவபக்த லக்ஷணம் என்ற ஸ்தோத்ரமும், ஆர்திஹர ஸ்தோத்ரமும் சேர்த்து ஒரே புத்தகமாக வெளியிடப்படுகிறது இவைகளில் சிவபக்த லக்ஷணத்துக்கு உரையெழுதி உதவியவர், ஓம் முருகாச்ரமத்தில் பிரதி மாதமும் அனுஷ நன்னாளில் மஹாபெரியவாள் மஹிமையைச் சுமார் ஐந்து ஆண்டுகளாகப் பிரவசனம் செய்து வரும் பிரம்மஸ்ரீ M.S. ராமஸ்வாமி ஐயரவர்களாவர். ஆர்திஹர ஸ்தோத்ரத்துக்குஉரை தந்துஉதவியவர், பலவருடங்களாகநமது மேற்கு மாம்பலம் ஸ்ரீ சங்கர பக்த ஜன சபையின் ஆதரவில் பல தலைப்புகளில் பல சமயங்களில் பிரவசனம் செய்தவர்களும் நமது மலர்களுக்குப் பெருமளவில் விஷயதானம் செய்தவர்களுமானபிரம்மஸ்ரீ P.N. நாராயணசாஸதிரிகளாவர். இவர்கள் இருவருக்கும் அடியேனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீ ஐயாவாள் அவர்களின் மற்ற கிரந்தங்களுக்கும் உரை எழுதி உதவுமாறு இப்பெரியோர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்நூலினை விரைவில் அச்சிட்டு வெளியிட உதவிய ஜகத்குரு பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் கல்யாண்ஜி அவர்கட்கும் அடியேனது நன்றி உரித்தாகுக.

இந்த நூலினைப் பெற்று அன்பர்கள் படித்து சிவநாம சங்கீர்த்தனத்தின் பெருமையையறிந்து உய்யுமாறு கோரு கிறேன். இந்த நூலில் உள்ள ஸ்தோத்ரங்களின் மூல சுலோகங்களை கிரந்தம் அல்லது தேவநாகர எழுத்தக் களில் படிக்க விரும்புவோர்க்கு XEROX பிரதி செய்து கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாம் சிவன் செயல். சிவபெருமான் கிருபை புரிவார்.

இங்ஙனம்

சங்கரனடிமை,

கவுணியர்கோன்கழல்பரவுமடிமை,

திருநீறு-கண்மணி தரிக்கும் அனைவர்க்கும் அடிமை

ஆங்கீரஸ சர்மா

பதிப்பாசிரியர்

''ஸ்ரீமஹாதேவ ஜயம்''

33/2, விவேகானந்தபுரம் 1வது தெரு,

மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

தொ. பே. எண் : 4713351

28-11-1999

சிவம்

அச்சிட்டோர் :

சாம்பியன் பவர் பிரிண்டர்ஸ்,

3, சத்தியநாராயணா தெரு, சென்னை-600033

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

சிவ பக்த லக்ஷணம்



(திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச
ஐயாவாள் அருளியது)

தமிழ் உரை :

பிரம்மஸ்ரீ M. S. ராமஸ்வாமி ஐயர் அவர்கள்

1. நாத த்வதீய மபிதான முபாச்ரிதானாம்
   க்ரோத ஸ்மராதிக குவ்ருத்தி பிசாசிகாபி : ।
   ஆபி: கதம் பரிபவோ பகவன் நமீஷாம்
   அந்தர் நிஷீததி பவான்கலு சூலபாணி: ॥

1. ஹே நாதா! உம்முடைய திருநாமத்தையே சரணடைந்தவர்களுக்கு பிசாசுகள் போன்ற கோபம் காமம் இவைகளால் எந்த பாதிப்பும் கிடையாது. ஏனென்றால் அவர்களுடைய ஹ்ருதயத்தில் சூலமேந்தியவராக பூதகணங்களின் தலைவனான நீரன்றோ எப்பொழுதும் வீற்றிருக்கின்றீர்!

2. தர்ப ஸ்மர ப்ரப்ருதி தாவ விதஹ்ய மானம்
   லோகம் விலோக்யக்ருபயேச க்ருபாம் தவாஸ்மின்
   வாஞ்சந்தி யாந்தி ச முதம் வயமேததாபத்
   த்யக்தா; கிலேதி சரணீக்ருத தாவகாக்யா; ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

2. காமம் க்ரோதம் முதலிய காட்டுத்தீ போன்ற தீய சக்திகளால் பொசுக்கப்படுகிற இந்த லோகத்தைப் பார்த்து, பயந்து, உமது கிருபையையே யாசிக்கிறோம். ஹே ஈச! தங்கள் திருநாமத்தையே சரணடைந்து இவைகளிலிருந்து விடுபட்டவர்களாக ஸந்தோஷத்தை அடைகிறோம்.

3. காயஸ்ய ஹேயநிதிதாம் ம்ருதி ருக் ஜரார்த்தி
ஆத்யானந்த்யமப்யல மவேத்ய விமுக்த ஸர்வா: ।
சம்போ சரந்தி விருஜஸ்த்வயி பத்த பாவா:
யே ஸாதராஸ் தவ ஹி நாம்னி மஹானுபாவா: ॥

3. ஹே சம்போ! வியாதி, மூப்பு, மரணம், இவைகளுக்கு இருப்பிடமான இந்த மனித சரீரத்தின் அவலநிலை வெறுக்கத்தக்கது. ஆகையால் அந்த சரீரம் அடைந்தது போதும் போதும் என்று, உம்மிடம் பிரேமை கொண்டு, உம்மிடமே நிலைத்த மனமுடையவர்களாய், எப்பொழுதும் உம் திருநாமத்திலேயே எவர்கள் நிலைகொள்கிறார்களோ அவர்களே மஹான்கள்.

4. த்வந்நாம கீர்த்தன பரௌஷத மாச்ரிதேZஸ்மின்
அஸ்மை கலு ஸ்மரஹர ஸ்வதஸே த்வமேக:
அன்யத்து கிஞ்சிதபி ந ஸ்வததே ததேதத்
ஆகண்டலஸ்ய பதமஸ்து விதே: பதம வா!

4. மன்மதனை எரித்த மஹேச்வரா! உம் நாம ஸங்கீர்த்தனமாகிற உயர்ந்த மருந்தை அருந்தியவர்களுக்கு, நீர் ஒன்றே ருசிக்கும். ஸ்வர்க்கலோகமோ, பிரம்மபட்டமோ வேறெதுவும் அவர்களுக்கு ருசிப்பதில்லை.

5. ஆகாங்க்ஷிதும் கமலஜாதிபிரப்யலப்யம்
ஆப்தும் ச தன்னிருபஹத்யத வர்த்திதும் ச ।
ஸன்மௌளிலாளன பதம் பதமீச தே கிம்
கௌரீச யே த்வதபிதானரதா : ததன்யே ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

5. ஹே கௌரீசா! உம்முடைய திருவடி நிழல் பிரம்மா முதலியவர்களுக்கும் ஆசைப்பட முடியாதது. அது பரமஸாதுக்களால் தலைமேல் வைத்துக் கொண்டாடப் படுவது. ஆனால் உன் நாமஸங்கீர்த்தனம் ஸதா செய்பவர் களுக்கோ, மேற்படி நிலைகள் எளிதானது, என்றும் அவர் களை விட்டு அகலாதது.

6. ஏகம் பவத்பஜனமேவ ஸுகம் ததன்யத்
ஆர்த்யாத்மகம் ஸகலமேததிதி ப்ரபோத்தும் ।
ஸ்தாதும் ச முக்த ஸகலம் பவதேகதானம்
ஈசாஸ்த ஏவ சிவ யே தவ நாம்னி ஸக்தா: ॥

6. ஹே பரமேச்வரா! உலகத்தில் ஸுகம் எனப்படுவது உன் திருவடிகளை அடைவதே. மற்றதெல்லாம் துக்கத்தை கொடுக்கக் கூடியவை. இதை அறிவதற்கும், உம் திருவடி களிலேயே நிலைபெற்று நிற்கவும் தங்கள் திருநாமத்தை ஜபிப்பவர்களுக்கே முடியும்.

7. துக்காத்மகத்வமகிலஸ்ய தவாதிவேலா
நந்தாத்மதாஞ்ச ஸமவேத்ய ஜடித்யசேஷம் ।
த்யக்த்வாZநலார்த்த வபுஷஸ்ஸரஸீவ சம்போ
த்வய்யா பதந்தி ஸமுபாச்ரித தாவகாக்யா: ॥

7. ஹே சம்போ! இந்த பிரபஞ்சத்தைச்சேர்ந்த எல்லாமே துக்கத்தைக் கொடுக்கக் கூடியவை. உம்முடைய திவ்ய மங்கள ஸ்வரூபமே எல்லையில்லா ஆனந்தத்தைக் கொடுக் கக்கூடியது. இந்த உண்மையை அறிந்த சிவபக்தர்கள், கோடையில் தாபத்தினால் வெந்தவர்கள் குளிர்ந்த நீரில் முழுகி ஸுகமடைவதுபோல், உம்முடைய நாமஸங்கீர்த் தனத்தில் முழுகி ஆனந்தமடைகிறார்கள்.

8. ஆக்யா ப்ராஸ்தவ விபோ பவதாத்மகத்வம்
அஸ்யாகிலஸ்ய தவ சித்ஸுக ரூபதாஞ்ச ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

ஆபுத்ய பத்த ஹ்ருத்யாஸ்தவ சர்ம விந்தன்
த்யந்த: கிமப்யகணித த்ருஹிணாதி போகா: ॥

8. ஹே பிரபோ! உம்முடைய நாமஸங்கீர்த்தனத்திலேயே திளைத்தவர்கள், இந்த பிரபஞ்சமே துக்கமயம் என்றும், தாங்கள் ஒருவரே ஸச்சிதானந்த ரூபர் என்றும் தெளிவடைந்து, உம்மிடமே ஹ்ருதயத்தை செலுத்தியவர்களாக, தங்களுக்குள்ளேயே பிரம்மானந்தத்தை அனுபவிக்கிறார்கள்.

9. த்வேஷ்ய ப்ரியாதி ஸகலம் பவதீய ரூபம்
புத்வா த்வயி ப்ரணயத: ப்ரணயார்த்ர த்ருஷ்ட்யா
பச்யந்த ஏததவலம்பித தாவகாக்யா :
பச்யல்லலாட விசரந்தி ஜகத் புனந்த : ॥

9. முக்கண்ணப்பெருமானே! உமது திருநாமத்தில் லயித்தவர்கள், இந்த பிரபஞ்சம் முழுவதையும் தங்களுடைய திருஉருவமாகவே பாவித்து, விருப்பு வெறுப்பு அற்று, அன்பு குளிர்ந்த பார்வையுடன் நோக்குகிறார்கள். இந்த நிலையை அடைந்த அந்த மஹான்கள் இந்த லோகத்தில் ஸஞ்சரித்து அதை பாவனமாக்குகிறார்கள்.

10. ராகாதி க்ருத் விவித மேஷ மஹாநட: கலு
ஆந்ருத்ய தீர்த்தமிதி தத்வ த்ருசேஷமாணா: ।
க்ஷோப ந யாந்தி தததே சமுதம் ஸ்மரந்த :
த்வத்வைபவம் த்வபிதான நிபத்த பாவா : ॥

10. உமது திருநாமத்தில் அசைக்க முடியாத பக்தி கொண்டவர்கள், இந்த பிரபஞ்சத்தை நோக்கும்போது, இவையெல்லாம் உம்முடைய மாயலீலைகளின் நாடகம் என்ற உண்மையை உணர்ந்து, உம்பெருமையை எண்ணி எண்ணி வியந்து, ஆனந்தமே அடைகின்றனர்; மயக்கமுறுவதில்லை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

11. சம்போ கதம் நு சதுராஸ்தவ நாம்ணி ஸக்தா :
சச்வத் க்ருதேப்யபத ஏவ பராபவேன்யை : ।
அஸ்தோத்யமா: ப்ரதிக்ருதா வபயாத்வ மீஷாம்
ஏஷா சுதார்த்திரிதி தேஷு தயாம்வஹந்தி ॥

11. சம்போ! எனக்கு ஒன்று புரியவே இல்லை. காரண மின்றி ஓயாமல் பிறர் அவமானப்படுத்தினாலும், உம் முடைய நாம ஜபம் செய்பவர்கள், அதற்கு பதிலாக எதுவும் செய்யாமல் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல. ''எனக்காக இவர்கள் இத்தனை கஷ்டம் எடுத்துக்கொள் கிறார்களே'' என்று அவர்களிடம் கருணையே காட்டு கிறார்கள். இவர்கள் எவ்வளவு ஸாமர்த்யசாலிகள்?

12. த்வந்நாமதேய ரஸிகா : தருணேந்து மௌலே
துக்கம் நயாந்தி கிமபீதி ஹி வாத மாத்ரம் ।
தேZ மீ கில ஸ்வவிபதீவ வஹந்தி துக்கம்
த்ருக் கோசரம் வ்ரஜதி துக்கினி ஜந்துமாத்ரே ॥

12. ஹே சந்திரசேகரா! உம்முடைய திருநாமத்தை ஆச்ரயித்தவர்கள், கஷ்டப்படுவது இல்லை என்று சொல் லப்படுகிறதே, அது அவ்வளவு சரியில்லை. அவர்கள் கண் ணெதிரில் வேறு யாராவது துக்கமடைந்தால் இவர்கள் தங்களுக்கே துக்கம் வந்ததுபோல் தவிக்கின்றனர்.

13. ஸர்வத்ர வத்ஸலதயா த்வதவேக்ஷயா சோ-
தாரா மஹாந்த இதி தீன கலேன முக்தா : ।
ப்ரேம்ணா கலு த்வயி விபோ த்ருணிதாகிலார்த்தா :
த்வந் நாமதேய ரஸிகா: க்ருதிநோ ஜயந்தி ॥

13. ஹே பிரபோ! உம்முடைய நாமஸங்கீர்த்தன ரஸிகர் கள் எல்லாவற்றையும் நீராகவே பாவித்து, அன்புடன் நோக்கி பகுத்தறிவு தரும் வித்தியாஸங்களை விடுத்து, உதாரகுணமுள்ளவர்களாகவும், மஹான்களாகவும், பாக்ய

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

சாலிகளாகவும் திகழ்கிறார்கள். அவர்கள் மோக்ஷம் முதலிய புருஷார்த்தங்களையும் துச்சமாக மதிக்கும் பேறு பெற்றவர்கள்.

14. நாத த்வதீக்ஷண வசாதகிலேஷ்வமீஷு
ந க்வாப்ய கௌரவ த்ருகாத்மனி து ப்ரகாமம் ।
நைச்யக்ர க்ரஹஸ்த்வயி து ரச்திரநர்கலேதி
க்வாதீ தவந்த இதமாத்ருத தாவகாக்யா : ॥

14. ஹேநாதா! உமது திருநாமத்தை சரணடைந்தவர்கள். உம்மிடம் உள்ள அளவில்லா பிரேமையினால், இந்த பிரபஞ்சத்தில் யாவரையும் உம்முடைய திருஉருவமாகவே பாவித்து கௌரவிக்கின்றனர். தன்னை மட்டும் எல்லோரையும் விட சிறியவனாகவே மதிக்கின்றனர். இந்த வித்தையை அவர்கள் எங்கு கற்றுக்கொண்டனர்?

15. அத்யுன்னதிம் விதரதீதி யசோதி வேலம்
மஸ்யாச்சகாஸ்தி சிவ தாவகநாம்னி ஸக்தை: ।
ஆக்யாயதாம் கிமியமா தனுதே நிதாந்த
மானம்ரமேத மகிலேஷு சராசரேஷு ॥

15. சிவபிரானே! உமது நாமசங்கீர்த்தனம் ஒரேசமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு கார்யங்களை செய்கிறது. உம் திருநாமத்தில் ஈடுபட்டவர்களுக்கு எல்லையற்ற மிக உயர்ந்த புகழைக் கொடுக்கிறது. அதே சமயம், அவர்களுக்கு அசையும், அசையா எல்லா வஸ்துக்களிடத்திலும் மிக மிக தாழ்மையான வணக்கத்தையும் தந்துவிடுகிறது.

16. த்வந்நாம கீர்த்தன ஜுஷோ Zநிசமேகதானா :
த்வத் ஸேவநம் விததோ Z பி ந தத்ர த்ருப்திம்।
சிந்தந்தி ஹந்த ஸதி விக்னலவே பவந்தி
வஹ்னிப்ரவேச இவ துஸ்ஸஹ தாபபாஜா: ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

16. உமது திருநாம ஸங்கீர்த்தனத்தில் ஈடுபட்டுள்ள அடியார்கள், ஓயாமல் உம் புகழ்பாடி உம்மையே ஸேவிக்கின்ற போதிலும், அவர்களுக்கு அதில் போதும் என்கிற திருப்தி ஏற்படுவதில்லை. ஆனால் அத்தகைய ஈடுபாட்டுக்கு ஒருசிறு இடையூறு வந்தாலும், தீயில் விழுந்த புழுபோல் துடிக்கிறன்றனர்.

17. அஸ்த ஸ்ப்ருஹம் முனிமஹம் ஸமதர்சனம் ஸ-
மஞ்சேமி தச்சரண பத்ம ரஜோபி லாஷாத் ।
இத்யாதி தாவக கிராம் கிரிசாஸ்பதம் த்வத்
ஆக்யா பரா: புனரமூநசிதும் க்ஷம: க: ॥

17. ஹே கிரீசா! ''பற்றற்றவனும், எல்லா உயிர்களிலும் ஸமமான நோக்குடையவனுமான பக்தனை நான் எப்பொழுதும் பின் தொடர்ந்து செல்கிறேன் — அவனுடைய பாத தூளிகளிடத்தில் எனக்குள்ள ஆசையினால்'' என்று நீர் கூறுவதாக நூல்கள் தெரிவிக்கின்றன. இப்படி நீர் அவர்களைப் பின்தொடர்ந்தே சென்று கொண்டிருந்தால் அவர்களைக் காப்பாற்றுவது யார்? (உமது நாம சங்கீர்த்தனமே காப்பாற்றுகிறது).

18. த்வத் ஸௌஹ்ருதாதி ஸுகுணாம்ருத
சீதலாஸ்த்வத்
ஆக்யா பரா இதி தவேச யசோZபி கோப்தும் ।
அஸ்மானபி த்வதபிதான ஜுஷோ ஜுஷஸ்வ
ஸ்வச்சம் யசஸ்ததபதே நநு மாZபனைஷீ:॥

18. ஹே ஈச! உமது நாமத்தையே ஜபிப்பவர்கள், உம்முடைய ஸௌலப்யம் முதலிய கல்யாணகுணங்களினால் குளிர்ந்தவர்கள் என்கிற நற்பெயர் உமக்கு இருக்கிறது. இதைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், எங்களையும் உம் நாமஸங்கீர்த்தனம் செய்பவர்களாக ஆக்கிவிடும். உமது நற்பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and in

19. க்ரோத ஸ்மராத்யுபசமம் த்வயி ராகிதாஞ்ச
தேஹிச மே ந யதி மே ச்வமுகேப்ய ஏப்ய :।
கிம் பேதகம் த்வதபிதாம் மம க்ருஹ்ண தோZஸ்ய
பல்குஸ்திதிஸ்த்வதய சோபரஹேது ரேஷா॥

19. ஹே ஈச! எனக்கு காமம் க்ரோதம் இவைகளை போக்கக் கூடிய உமது பக்தியை தந்தருளும். அப்படி கொடுக்காவிடில் எனக்கும் நாய் போன்ற மற்ற ஜீவன்களுக்கும் என்ன வித்யாஸம்? உம்முடைய நாமஸங்கீர்த்தனம் செய்யும் எனக்கும் அல்பத்தனம் இருந்தால் அது உமக்குத்தான் அபகீர்த்தி.

20. த்வந் நாம கீர்த்தன ஸுதா ரஸ தாரயாZஸ்த
சிச்சேதயா ப்ருச விச்ருங்கல ஸௌஹிதீக : ।
வேதாந்தராண்ய கலயன் விசராணி ஸோSஹம்
சாந்த: கதா சசிவதம்ஸ தவ ப்ரஸாதாத்॥

20. ஹே சந்திரசேகரா! உமது நாமஸங்கீர்த்தன இன்பப் பெருக்கால் இடையூறின்றி உம்மையே த்யானம் செய்து கொண்டு, உமது திருவருளால் வேறெதையும் அறியாதவனாக, நிம்மதியாய் எப்பொழுது இருப்பேன்?

21. மத் ப்ராணவல்லப மதீயநிதே மதாத்மன்
ஸாம்ப ப்ரபோ சிவ சசாங்கவிபூஷணேதி ।
த்வந்நாம தீவ்யதம்ருதோததிவீசி டோலான்
தோலைர் விதேஹி விரஜம் க்ருபயா விபோ
மாம்॥

21. என் தலைவா! ப்ரபோ! எனது நிதியே! என் உயிரே! ஸாம்பசிவ! சந்திரசேகரா! என்றெல்லாம் உமது திவ்ய நாம அம்ருதஸாகரத்தின் அலைகளாகிய தொட்டிலில் தாலாட்டப்படும் துன்பமில்லாத சேயாக என்னை ஆக்கிவிடுவீராக!

சிவபக்தலக்ஷணம் தமிழ் உரையுடன் முற்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்

ஆர்திஹரஸ்தோத்ரம்

திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாள் அருளியது.

தமிழ் உரை :

வேதமந்த்ரசாஸ்த்ர ரக்ஷணமணி, சிவோத்கர்ஷவர்ஷக

பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகள்

ஸ்ரீசம்போ மயி கருணாசிசிராம்
த்ருஷ்டிம் திசந்ஸுதாவ்ருஷ்டிம் ।
ஸந்தாப மபாகுரு மே மந்தா
பரமேச தவ தயாயாஸ்ஸ்யாம் ॥

நன்மையே பயக்கக்கூடிய ஸுகத்திற்கிருப்பிடமான முக்கண்ணனே! கருணை வழிந்தோடுகிற உன் பார்வையை என்மேல் விழச்செய்து, என்னைத்துயரமற்றவனாய்ச்செய். எல்லோருக்கும் மேலான உன்னையே நினைத்துக் கொண் டிருப்பேன்.

அவஸீதாமி யதார்திபி: அனுகுண-
மிதமோகஸோஹம்ஸாம் கலு மே।
தவ ஸந்நவஸீதாமி யத்
அந்தகசாஸன ந தத்தவானுகுணம்॥

துயரத்தின் எல்லையை முன் பிறவிகளில் செய்த ''ஸஞ் சிதம்'' பாவ மூட்டையால் அடைந்திருக்கிறேன். ஆனால், உன்பக்தன் அவ்வாறு துயரமடையமாட்டான் என நூல்கள் கூறுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and In

''சிவ'' எனும் இரண்டெழுத்தைத் தெரியாமல் ஒரு முறை சொல்லிவிட்டாலும் பாபக்குவியலை அழித்துவிடும்.

—பாகவதம்

தேவ ஸ்மரந்தி தவ யே
தேஷாம் ஸ்மரதோSபி நார்திரிதி கீர்த்திம் ।
கலயஸி சிவ பாஹீதி
க்ரந்தந் ஸீதாம்யஹம் கிமுசிதமிதம் ॥

எங்கும் ஒளிமயமாய் நிறைந்தவரே, உன் பக்தர்களும் அல்லது உன் அடையாளமான, விபூதி, ருத்ராக்ஷம், வில்வம், இவைகளைக் கண்டவனும் கேட்டவனும்கூட தாபமடைய மாட்டான். அங்ஙனமிருக்க உன்னை நேரிடத் தொழுபவன் எவ்வாறு அடைவான்?

குறிப்பு:- சிறந்த சிவபக்தரான ஸ்ரீதுர்வாஸ முனிவர் கைலாயத்தில் ஈசவரனிடம் பெற்ற திருநீற்றை நிறைய அணிந்த நெற்றியுடன் ஸ்வர்க்கம் சென்று கொண்டிருந்த போது வழியில் பெரிய துயரக்குரல்களைக் கேட்டு அங்கு சென்று எட்டிப் பார்த்தார். நெற்றியிலிருந்த திருநீறு உதிர, பாவ மூட்டை தொலைந்து எல்லோரும் நரகத்திலிருந்து சிவபதம் அடைந்தனர்.

—தேவீபாகவதம்

ஆதிச்யாகக்ருதௌ மாமந்தர்யாமிந் நஸ௱வ-
காத்மேதி ।
ஆர்திஷு மஜ்ஜயஸே மாம் கிம் ப்ரூயாம் தவ க்ருபைக
பாத்ரமஹம் ॥

உலகஸம்பந்தமில்லாது ஸாக்ஷியாக எங்கும் நிறைந்திருக்கும் ஈசனே! என் உள்ளத்திலும் நீ இருப்பதால் நான் துயரப்படுவது நியாயமல்ல.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

குறிப்பு :- எந்த சிவனால் இந்த எல்லாம் நிரம்பியிருக்கிறதோ அந்த ஈச்வரன் என்னை நல்வழியில் நடத்தட்டும்.
—உபநிஷத்

இம்மாதிரி கணக்கற்ற வேத வாக்யங்கள் சிவபக்தன் துயர் அடைய மாட்டான் எனக் கூறுகின்றன.

மந்தாக்ஷீரஹம் தவ
மயி கருணாம் கடயிதும் விபோ நாலம் ।
ஆக்ரஷ்டும் தாம் து பலாத்
அலமிஹ மத்தைன்யமிதி ஸமாச்வஸிமி ॥

நான் மூடர்களில் முதலில் எண்ணத்தக்கவன். நீயோ எல்லா இடங்களிலும் நிறைந்து விளங்குபவன். உன் அருளைப் பெற நான் அருகனல்லவோ என எண்ணினேன். ஏழை பங்காளனான உன் அருளை அடைந்துவிடலாம் என நம்பிக்கை பிறந்துவிட்டது.

த்வம் ஸர்வஜ்ஞோऽஹம் புந:
அஜ்ஞோऽநீசோऽஹமீச்வரஸ்த்வமஸி ।
த்வம் மயி தோஷாந்கணயஸி
கிம் கதயே துததி கிம் தயா ந த்வாம் ॥

ஈசனே! நீயோ எல்லாமறிந்தவன். நான் ஒன்றுமே தெரியாதவன். நீ எல்லாவற்றிற்கும் தலைவன், நானோ ஆதரவற்றவன். உன் பக்தனான நான் துயருற்றால் ஏழை பங்காளன் என்னும் உன் பெயருக்கு ஒரு குறை ஏற்பட்டு விடும், எனவே என்னைக்கட்டாயம் கைவிடமாட்டாய்.

ஆச்ரிதமார்ததரம் மாமுபேக்ஷஸே
கிமிதி சிவ ந கிம் தயஸே ।
ச்ரிதகோப்தா தீனார்திஹ்ருதிதி
கலு சம்ஸந்தி ஜகதி ஸந்தஸ்த்வாம் ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

பல துன்பங்களை அடைந்து அது நீங்குமிடமான உன்னை அண்டினேன். என் துயர் நீங்காததால் நீ என்னைக் கவனிக்க வில்லையோ எனத்தோன்றியது. ஏழை பங்காளன், அண்டினவனைக்காப்பவன் என்றெல் லாம் மறைகளும் பெரியோர்களும் புகழ்ந்திருப்பதால், நிச்சயம் என்னைக் கைவிட மாட்டாய் என நம்புகிறேன்.

குறிப்பு:— பக்தத்ராண பராயண: பக்தர்களைக்காப்பவன்
—மஹன்யாஸம்

ப்ரஹராஹரேதி வாதீ
பணிதமதாக்ய இதி பாலிதோ பவதா ।
சிவ பாஹீதி வதோ஽ஹம்
ச்ரிதோ ந கிம் த்வாம் கதம் ந பால்யஸ்தே ॥

"கொண்டுவா, கொல் என்று கொள்ளைக்காரனின் சொல்லிலும் ஹர என்கிற பெயர் சொல்லப்பட்டது என்று அவனையும் காப்பாற்றிய நீ உண்மையிலேயே உன் பெயரை எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருக்கும், என்னை அவசியம் காப்பாற்றுவாய.

சரணம் வ்ரஜ சிவமார்தீ :
ஸ தவ ஹரேதிதி ஸதாம் கிரா஽ஹம் த்வாம் ।
சரணம் கதோ஽ஸ்மி பாலய கலமபி
தேஷ்வீச பக்ஷபாதாந்மாம் ॥

சிவனைச் சரணடைந்தால் கைவிடாமல் காப்பாற்று வான் என ஆன்றோர் ஐயந்திரிபுக்கிடமில்லாமல் கூறியுள் ளனர். பாவியாயினும் அம்மாதிரி சரணடைந்த என்னை உன்பக்தர்களான பெரியோர்கள் சொல் உண்மையாவதற் காக, அவசியம் என்னைக்காப்பாற்றுவாய்.

குறிப்பு :- க்ஷேமம் குரு சங்கர சுகத்தைக் கொடுப் பவனே என்னைக் காப்பாற்று.

ஆர்திஹரஸ்தோத்ரம் முற்றிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

ஆன்மிக புத்தகங்கள் யாவும்
அழகிய வடிவமைப்புடன்
நல்ல முறையில் தயார் செய்து
குறித்த நேரத்தில் கொடுக்கப்படும்

ஸ்ரீ சத்யசாய் கிராபிக்ஸ்,
29/1, கோல்டன் அபார்ட்மெண்ட்ஸ்,
சரோஜினி தெரு, தி.நகர்,
சென்னை-600 017, தொ. பே : 4332504

மற்றும்

சாம்பியன் பவர் பிரிண்டர்ஸ்
3, சத்தியநாராயணா தெரு, சென்னை-33

பொங்கல் முதல் வெளிவருகிறது
"ஜகத்குரு"
(ஆன்மிக மாத இதழ்)



தனி இதழ் ரூ. 5/-
ஆண்டு சந்தா ரூ. 60/-
ஆயுள் சந்தா ரூ. 500/-
காப்பாளர் தொகை ரூ. 1000/-

ஸ்ரீ சங்கரானந்த ஸ்வாமிகள் (ஓம் முருகாஸ்ரமம்)
இந்த நிர்வாகத்தில் பங்கேற்க இசைந்துள்ளார்கள்

தொடர்புக்கு : ஜகத்குரு ஆன்மிக மாத இதழ்
20, ஆரியகவுடர் ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை-600033

Center for Shaiva Studies, Pondicherry Collection